மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 48/24 |
| பெயர் | : | மதியழகன் (PW1) |
| த/பெ. | : | நடராஜன் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Ambikavathi is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of August 2024

<u>முதல் விசாரணை</u>

1)நான் நாரைகிணறில் வசிக்கிறேன்.நான் விவசாய வேலை செய்கிறேன். சாட்சி தங்கத்தை தெரியும்.காயம்பட்ட சாட்சி முத்துலெட்சுமியை தெரியும்.அவர் என் அத்தை உறவு முறை.ஆஜர் எதிரியை தெரியும்.அவர் என் தாய் மாமா என் அம்மா உடன்பிறந்த தம்பி.சாட்சி முத்துலெட்சுமி ஓட்டுடன்பட்டியில் வசிக்கிறார்.சாட்சி முத்துலெட்சுமிக்கும் எதிரி அம்பிகாவதிக்கும் வீடு சம்மந்தமாக பிரச்சனை இருந்தது.

2)15.07.2023 அன்று இரவு 12.45 மணிக்கு நான் என் வீட்டில் தூங்கி கொண்டு இருந்தபோது சாட்சி தங்கம் எனக்கு போன் செய்து அம்பிகாவதி முத்துலெட்சுமியை அடித்து முத்துலெட்சுமி காயத்துடன் வந்திருப்பதாக தெரிவித்தார்.நான் உடனடியாக அங்கு சென்றேன்.முத்துலெட்சுமியை பார்த்தேன்,முத்துலெட்சுமிக்கு நாடியிலும்,இடது கையிலும் காயம் இருந்தது.நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தேன்.முத்துலெட்சுமியை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.போலிசார் அங்கு வந்தார்கள்.போலிசாரிடம் நான் புகார் மனு கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி ஆஜர்.எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞரால் எடுத்துரைப்பு செய்யப்பட்டது)

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.